இருக்கிறது. தண்ணீர்தான் அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது அதிகம் உற்பத்தி செய்கிறார்கள். அது வேறு பிரச்சினை. நான் கொடுத்த புள்ளி விவரங்களைக் கவனித்திருந்தால் தெரிந்திருக்கும் நீண்டகால ஒப்பந்தம் என்ற அடிப்படையில் 1972-ம் ஆண்டு எப்ரல் மாதம் ஒப்பந்தத்தின் ஷரத்து—ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு வேண்டும் என்று ஒரு கணக்கைக் கொடுத்தோம்—அதன் அடிப்படையிலே ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னேன். அந்த அடிப்படையில் 41,700 டன்—மார்ச்சில் 70 ஆயிரம் டன்—23, 24 ஆயிரம் டன் மன்த்லி டெலிவரியாக என்று சொன்னோம். அதேசமயத்தில் இடைக்கால அடிப்படையில் 97 ஆயிரம் டன் உடனடியாக அனுப்பினால் போதும் என்று சொன்னோம். இவ்வளவு புள்ளி விவரங்களையும் சொன்னேன். அவர்களே ஒப்புக்கொண்ட புள்ளி விவரங்களைச் சொன்னேன். அதைக் கவனித்திருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டார் என்று கருதுகிறேன். 70 ஆயிரம் டன் அனுப்புவது என்று சொன்னார்கள். சொல்லிவிட்டு, அதே கடிதத்திலேயே 38 ஆயிரம் டன் தான் அனுப்பி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை வாசித்தேன். இதில் குழப்பம் எதுமில்லை என்பதைப் புரிந்துகொண்டிருக்க முடியும் என்று கருதுகின்றேன்.

அனல் மின்சார நிலையத்தைப் பொறுத்தவரையில் 230 மெகாவாட் பலவிதமான ஸ்டேஜ்களில் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். முழு உற்பத்தி செய்ய வேண்டுமானால், 630 மெகாவாட் உற்பத்தி செய்ய வேண்டுமானால், எவ்வளவு நிலக்கரி தேவை என்று சொல்லி இருக்கிறோம். லிங்கேஜ் கமிட்டியில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம். அவ்வளவும் தந்தால் முழுமையாக உற்பத்தி செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். 200 மெகாவாட் உற்பத்தி செய்யமுடியும் என்று நிரூபித்திருக்கிறோம். நாங்கள் சொல்லிச் சொல்லி, 1969-இல் தொடங்கப்பட்டு, 230 மெகாவாட் உற்பத்தி செய்து, அடுத்த கட்டம் 110 மெகாவாட் மேலும் உற்பத்தி செய்ய முடியும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம். அந்த கபேசிடிக்கும், இப்போது கொடுத்து வருகின்ற நிலக்கரிக்கும் சம்பந்தமே இல்லை என்றுதான் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மேற்கொண்டு எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டருக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்திற்குப்பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் எதும் இல்லை என்று கருதி இதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1973-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, 1973-ம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) 1972–73-ம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972-73ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 64·38 கோடி ரூபாயாகும். இதில் 57·29 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கைச் சேர்ந்ததாகும் ; எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மொத்த மானியக் கோரிக்கையில் 64·05 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின் கீழும், 33 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்காகவும் (Centrally Sponsored Schemes), மத்திய அரசுத் திட்டங்களுக்ககாகவும் (Central Sector Schemes) 8·82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை முழுவதும் மத்திய அரசிடமிருந்து நமக்குத் திரும்பக் கிடைத்து விடும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள் சிலவற்றை இப்போது குறிப்பிட விழைகிறேன்.